பொதுச் சுற்றறிக்கை இல: 01-37/2007(I) எனது இல : FHB/SH/Gen/2015

சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்
செயலாளரின் அலுவலகம்,
385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவன்ச தேரோ
மாவத்தை,
கொழும்பு 10.

6.01.2016 ~~2015.~~

அனைத்து மாகாண சுகாதார செயலாளர்கள்,

அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

அனைத்து விசேட பிரச்சாரப் பிரிவுகளினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் பணிப்பாளர்கள்,

தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர்,

அனைத்து தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரிகள்,

அனைத்து வைத்தியசாலைகளினதும் பணிப்பாளர்கள/வைத்திய அத்தியட்சகர்கள் / மாவட்ட வைத்திய அதிகாரிகள் / பொறுப்பான வைத்திய அதிகாரிகள்,

அனைத்து மாநகர சபைகளினதும் தலைமை சுகாதார வைத்திய அதிகாரிகள்,

அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள்,

அனைத்து பாடசாலை வைத்திய அதிகாரிகள்,

## பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டம்

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.37/2007 இலக்கத்தைக் கொண்ட 26.11.2007 திகதியிடப்பட்ட பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்திற்கான பொதுச் சுற்றறிக்கையைத் தொடர்ந்து, இச்சுற்றறிக்கையானது வெளியிடப்படுகின்றது.

சுகாதார அமைச்சினால் 1918 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்தில் பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. 1926 ஆம் ஆண்டில் தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தில் (NIHS) சுகாதார அலகு அமைப்பு நிறுவப்பட்டதிலிருந்து, பாடசாலை சுகாதாரமானது சுகாதார வைத்திய அதிகாரியின் பணி என அடையாளங்காணப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்காக கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய பிரதான நகரங்களில் பாடசாலை வைத்திய அதிகாரிகளும் மாநகரசபைப் பிரதேசங்களில் சுகாதார வைத்திய அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான இலக்கானது, "பிள்ளைகள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பதையும், அவர்கள் தங்களது சொந்த ஆரோக்கியத்தையும் தங்களது குடும்பத்தினரது ஆரோக்கியத்தையும் சமுதாயத்தினரது ஆரோக்கியத்தையும் மேம்படுத்தக்கூடிய

ஆற்றலை உடையவர்களாக இருப்பதையும், அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி வாய்ப்புகளிலிருந்து உச்ச பயனைப் பெறக்கூடியவர்களாக இருத்தலையும் உறுதி செய்தலாகும். உலக சுகாதார

அமைப்பின் வரையறைகளின் அடிப்படையில், பாடசாலைகளை "சுகாதாரத்தை மேம்படுத்தும் அமைப்புகளாக அல்லது மையங்களாக" மாற்றியமைப்பதன் மூலம் இவ்விலக்கை அடைவதற்கு சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து செயற்படுகின்றன.

மனித நடத்தை மற்றும் சுற்றாடலுடன் தொடர்புடைய விதத்தில் அதிகரித்து வரும் தொற்றாத மற்றும் தொற்று நோய்களின் தாக்கம் பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டம் விஸ்தரிக்கப்படுவதை போதியளவில் நியாயப்படுத்துகின்றது. இது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கையின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினால் (NPoA) முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சானது சகல பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையினுள் சுகாதார சேவைகளை வழங்கும் கடப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கின்றது. எனவே பாடசாலை மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களை மேற்சிகிச்சைக்காக விசேட வைத்திய நிபுணர்களின் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புதல், குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், தொடர்ந்து கண்காணித்தல், சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பாடசாலை சமூகத்தை வலுவூட்டுதல் ஆகியவை பிரதான முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன.

அதற்கிணங்க பின்வரும் மூலோபாயங்கள் அடையாளங்காணப்பட்டு நாடளாவிய ரீதியில் கல்வி அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்ட பாடசாலைகள், விசேட கல்வி நிறுவனங்கள், பிரிவேணைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும்.

1. சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைக் கொள்கைகளை வடிவமைத்தல்.
2. சுகாதார மேம்பாட்டிற்கு அவசியமான ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல்.
3. பாதுகாப்பான, ஆரோக்கியமான சுற்றாடலை உருவாக்குதல்.
4. சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாடசாலைக்கும் சமூகத்தினருக்குமிடையிலான உறவை விருத்தி செய்தல்.
5. சுகாதார மேம்பாட்டிற்கு அவசியமான சுகாதார சேவைகளை வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட ஐந்து மூலோபாயங்களையும் பற்றிய மேலதிக விபரமானது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட "பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" எனும் கைநூலின் 3-6 பக்கங்களில் காணப்படுகின்றன.

சுகாதார அமைச்சானது **பாடசாலை சுகாதாரம் மற்றும் பதின்ம வயதினரின் சுகாதாரத்திற்கான** ஒருங்குநிலை மையமாகக் குடும்ப சுகாதாரப் பணியகத்தை நியமித்துள்ளது. அதே வேளையில் கல்வி அமைச்சானது பாடசாலை சுகாதார செயற்பாடுகளுக்கான ஒருங்குநிலை மையமாக சுகாதாரம் மற்றும் போஷாக்குக்குப் பொறுப்பாகவுள்ள கல்விப் பணிப்பாளரை நியமித்துள்ளது.

<u>பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள்</u>

1. பாடசாலைப் பிள்ளைகளின் சுகாதார மேம்பாட்டிற்காகவும், விருத்திக்காகவும் சுகாதாரத்துறைக்கும் கல்வித்துறைக்கும் இடையிலான கூட்டாண்மையைப் பலப்படுத்தல்.
2. பாடசாலைப் பிள்ளைகளின் சிறந்த வளர்ச்சிக்காகவும் விருத்திக்காகவும் அவசியமான தேவைகளின் பரிமாணத்தை இனங்காணுதல்.
3. பாடசாலை மாணவர்கள் தமது சொந்த ஆரோக்கியத்தைப் பாதிக்கும் காரணிகளைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் ஆரோக்கியத்தை மேம்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பதற்கான திறனை முன்னேற்றுவதற்காக பொருத்தமான சுகாதார மேம்பாட்டுச் செயற்பாடுகளை வழங்குதல்.
4. குடும்பத்தினருக்குள்ளும் சமுதாயத்தினருக்குள்ளும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான மாற்றத்தை ஏற்படுத்தும் கருவிகளாக செயற்படுவதற்காக பாடசாலை மாணவர்களுக்கு அதிகாரமளித்தல்.
5. கல்வி கற்பதற்கு ஏற்ற வகையில் பாடசாலைச் சுற்றாடலை ஆரோக்கியமானதாகவும் பாதுகாப்பானதாகவும் விருத்தி செய்தல்.
6. தொற்று நோய்களிலிருந்தும் தொற்றாத நோய்களிலிருந்தும் பாடசாலை மாணவர்களைப் பாதுகாத்தல்.
7. சுகாதாரப் பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே விரைவாக இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்காக பாடசாலை மாணவர்களை வைத்திய பரிதோதனைக்கு உட்படுத்துதல்.

8. தொடர்ச்சியாகக் கண்காணிப்பதன் மூலமாகவும் தகுந்த இடையீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாகவும் பாடசாலை மாணவர்களின் போஷாக்கு நிலையை முன்னேற்றலும் நல்ல சுகாதார நடைமுறைகளை மேம்படுத்தலும்.
9. பாடசாலை சுகாதார செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக சமுதாயப் பங்களிப்பினை அதிகரித்தல்.
10. பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் வினைத்திறனை மதிப்பிடுவதற்காக கண்காணித்தலையும் மதிப்பீடு செய்தலையும் மேற்கொள்வதற்கான ஒரு முறையை வழங்கல்.

இச்செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களாக மாகாண மட்டத்தில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், மாவட்ட மட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் உள்ளனர். பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதில் மாவட்ட மட்டத்தில் தாய் சேய் நல சுகாதார வைத்திய அதிகாரிகளும், பிரதேச மட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகளும் மாநகரசபைப் பிரதேசங்களில் பாடசாலை வைத்திய அதிகாரிகளும், பிரதான வைத்திய அதிகாரிகளும் ஒருங்குநிலை உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது மேற்பார்வையின் கீழ் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை பாடசாலையில் ஒழுங்கு செய்யும் மற்றும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகருடையதாகும். அத்துடன் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார தாதிய சகோதரி, மேற்பார்வை குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர், குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் ஆகியோர் பாடசாலை சுகாதாரச் செயற்பாடுகளுக்குத் தமது உதவியை வழங்க வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரிகளின் வேண்டுகோளின்பேரில், ஏனைய மாகாண மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களாகிய மாகாண சமுதாய மருத்துவ நிபுணர், பிராந்திய தொற்று நோயியலாளர், பிராந்திய பல் வைத்தியர், மன நல சுகாதார வைத்திய அதிகாரி, தொற்றாத நோய்த்தடுப்பு வைத்திய அதிகாரி, திட்டமிடல் வைத்திய அதிகாரி, மாகாண மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மாவட்ட மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிராந்திய மேற்பார்வைப் பொதுச் சுகாதார தாதி உத்தியோகத்தர், பொதுச் சுகாதார தாதிய சகோதரி, சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் அமுல்படுத்தல் மட்டத்தில் அவசியமான சகல ஆதரவையும் வழங்க வேண்டும்.

கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்பட்டு, சுகாதார மேம்பாட்டுப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பிரதான நடவடிக்கைகளை அடையாளம் காணல் வேண்டும். பின்னர் பிரச்சனைகளைப் பகுப்பாய்வு செய்து தேவைகளை மதிப்பீடு செய்து அவற்றைத் தீர்ப்பதற்காக பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து ஒரு செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

**சுகாதார உத்தியோகத்தரின் கடமைகளாவன:**

- பாடசாலை சமூகத்தின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்படல்.
- மாணவர்கள் சிறந்த வளர்ச்சியையும் விருத்தியையும் அடைவதற்கு அவசியமான தேவைகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை அடைவதற்காக வழிகாட்டுதல்.
- பிரச்சனைகளைப் பகுப்பாய்வு செய்த பின், பாடசாலை சுகாதாரக் கொள்கையையும் பாடசாலை சுகாதார செயற்பாட்டுத் திட்டத்தையும் தயாரிப்பதற்கு பாடசாலை சுகாதாரக் கழகத்திற்கு அனுசரணை வழங்குதல்.
- சுகாதாரப் பிரச்சனைகள் மற்றும் வாழ்க்கை சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியமான அறிவு, உளப்பாங்குகள் மற்றும் செயற்திறன்களை பாடசாலைச் சமூகத்தினரிடையே உருவாக்குதல்.
- பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் தொடர்ந்து பேணுவதற்கும் அவசியமான உளப்பாங்குகளையும் திறமைகளையும் விருத்தி செய்தல்.
- மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமாகவும் மேற்சிகிச்சைக்காக அவர்களை அனுப்புவதன் மூலமாகவும் மாணவர்களினது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு உதவுதல்.
- பாடசாலை மாணவர்களின் உளச்சுகாதாரப் பிரச்சனைகளை அடையாளங்கண்டு அவர்களை சிகிச்சைக்காக அனுப்புதல்.
- விசேடமான தேவைகளையுடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான முறைமையை உருவாக்குதல்.

- இனப்பெருக்க சுகாதாரத்தைக் குறித்துக் கற்பித்தல், உளவளத்துணை, சமூக உளவியல் சார் செயற்திறன்கள் (வாழ்க்கைத் திறன்கள்) ஆகியவற்றைப்பற்றி ஆசிரியர்களின் செயற்திறன்களை மேம்படுத்துதல்.
- பாடசாலைச் சூழலைப் பாதுகாப்பானதாகவும், துப்பரவானதாகவும், வன்முறைகள், துஷ்பிரயோகம், துன்புறுத்தல்கள் அற்றதாகவும் ஊறு விளைவிக்கக்கூடிய சரீரப்பிரகாரமான மற்றும் உளவியல் தண்டனைகள் வழங்கப்படாததுமான இடமாகப் பேணுவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
- பாடசாலை மருத்துவப் பரிசோதனைகளையும், வருடாந்த பாடசாலை சுகாதார மதிப்பீட்டையும் மேற்கொண்டு பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் சாராம்சத்தைப் பாடசாலை அதிபருக்கு வழங்குதலும், மாணவர்களின் சுகாதாரப் பிரச்சனைகளைக் கொண்ட அறிக்கையைப் பாடசாலை ஆசிரியருக்கு வழங்குதலும்.
- தொற்று நோய்களையும் தொற்றாத நோய்களையும் தடுப்பதற்கு, பாடசாலைச் சமூகத்திற்கு வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- பாடசாலையில் நுளம்பு பெருகுவதனைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- பாடசாலையில் "இரும்புச்சத்து, ஃபோலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ" குறை நிரப்பிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான வழிகாட்டல்களை வழங்கலும், மேற்பார்வை செய்தலும்.
- பகல் உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை மேற்பார்வை செய்தல்.
- பாடசாலை உணவகத்தை மேற்பார்வை செய்தல்.
- பாடசாலை சுகாதார செயற்பாடுகளுக்கு சமுதாயத்தினரதும் ஏனைய முகமையகங்களினதும் ஆதரவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பாடசாலை மாணவர்கள், சமூகச் செயற்பாடுகளிலும் சுகாதார அபிவிருத்தித் திட்டப்பணிகளிலும் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
- மாணவர்களின் சமூக உளவியல்சார் செயற்திறன்களை (வாழ்க்கைத் திறன்கள்) முன்னேற்றுவதற்கு உதவுதல்.
- கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து, பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினைக் கண்காணித்தலும், மதிப்பீடு செய்தலும், பின்னூட்டல்களை வழங்கலும்.

சகல மாகாண சுகாதாரச் செயலாளர்களும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும், சம்பந்தப்பட்ட ஏனைய மாகாண மற்றும் பிராந்திய சுகாதார உத்தியோகத்தர்களும், பாடசாலைகளை "சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைகளாக" அபிவிருத்தி செய்வதற்கு கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

வழமையாக நடைபெறுகின்ற பாடசாலை சுகாதார செயற்பாடுகளான பாடசாலை மருத்துவப் பரிசோதனை, பாடசாலை சுகாதார மேம்பாடு தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் பயிற்சித் திட்டங்கள், கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான துணை வலிமை கொடுத்தல், பாடசாலை சுகாதாரக் கழகங்களின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு தேசிய மட்டத்தில் சுகாதார அமைச்சிடமிருந்தோ அல்லது கல்வி அமைச்சிடமிருந்தோ அனுமதியைப் பெறவேண்டியதில்லை. ஆயினும் இச்செயற்பாடுகள் கல்வி அமைச்சின் தொடர்புடைய மாகாண, வலய மற்றும் கோட்டப் பணிப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்களுடன் இணைந்து திட்டமிடப்பட்டு அவை அந்த ஆண்டிற்கான மாகாணக் கல்வித்துறை அபிவிருத்தித் திட்டத்திலும் மாகாண சுகாதாரத்துறை அபிவிருத்தித் திட்டத்திலும் உள்ளடக்கப்பட வேண்டும்.

**பின்னிணைப்பு A** இனைப் பார்க்கவும்

**பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டம் முழுவதும் பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கப்படலாம்.**

- வருடத்தின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலை சுகாதார நடவடிக்கைகள்.
- "பாடசாலை சுகாதார தினத்தின்" போது மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலை சுகாதார நடவடிக்கைகள்.
- வருடம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலை சுகாதார நடவடிக்கைகள்.

**வருடத்தின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலை சுகாதார நடவடிக்கைகள்**

1. வருடாந்த பாடசாலை சுகாதார ஆய்வு

இது பாடசாலையின் தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளை மதிப்பிடுவதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் ஒவ்வொரு வருடத்தினதும் முதற் காலாண்டுப் பகுதியில் நிறைவேற்றப்பட்டு அதன் சாரம்சமானது (பாடசாலை சுகாதார ஆய்வு அறிக்கை - H 1015A) பாடசாலைக்கு வழங்கப்பட்டு, குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் பாடசாலைக்கு வழங்கப்பட வேண்டும்.

**பாடசாலை சுகாதார தினம்**

சுகாதார வைத்திய அதிகாரிகளும் மாநகரசபைப் பிரதேசங்களின் தலைமை சுகாதார வைத்திய அதிகாரிகளும் பாடசாலை சுகாதார நடவடிக்கைகளுக்கென ஒவ்வொரு வாரமும் ஒரு நாளை ஒதுக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கூடாக பாடசாலை சுகாதார செயற்பாடுகளுக்கு முன்னுரிமை பெறப்படும். பாடசாலைச் சுகாதார செயற்பாடுகளுக்கென ஒதுக்கப்படும் தினமானது "பாடசாலை சுகாதார தினம்" என அழைக்கப்படவேண்டும்.

பாடசாலைச் சமூகத்தின் முனைப்பான ஒத்துழைப்போடு சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலை வைத்திய அதிகாரி, மாநகர சபைப் பிரதேசங்களின் பிரதான வைத்திய அதிகாரி ஆகியோரினால் பாடசாலைச் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் நடாத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டும். அவர்களின் மேற்பார்வையின் கீழ் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து ஒருங்கிணைக்கும் பொறுப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகரைச் சாந்ததாகும்.

**பாடசாலை சுகாதார தினத்தின் போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்**

1. பாடசாலை மருத்துவப் பரிசோதனை (SMI)
2. இனங்காணப்பட்ட நோய்களுக்கான சிகிச்சையை வழங்கலும், மேற்சிகிச்சைக்காக அனுப்புதலும்.
3. நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்
4. விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் / விரிவுரைகள்
5. ஆசிரியர்களுக்காக தொற்றாத நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையம் / சுகவனிதையர் சிகிச்சை நிலையம் ஆகியவற்றை நடாத்துதல்.
6. பாடசாலை சுகாதாரத் தரவுகளைப் பதிவு செய்தலும் தொடர்புடைய அறிக்கைகளைப் பாடசாலைக்கு வழங்குதலும்.
7. அத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுதலைக் கண்காணிக்கவும்.

   - ஒவ்வொரு வாரமும் இரும்புச்சத்து, ஃபோலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ குறை நிரப்பிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் (WIFS).
   - பாடசாலையில் பல் வைத்திய சேவையை வழங்குதல்.
   - நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.
   - பாடசாலை உணவகங்களை மேற்பார்வை செய்தல்.

1. பாடசாலை மருத்துவப் பரிசோதனை (பின்னிணைப்பு **B** இனைப் பார்க்கவும் )

பாடசாலை மருத்துவப் பரிசோதனையானது 100% ஐயும் உள்ளடக்குவதாக அமைய வேண்டும். இப்பரிசோதனையை நடைமுறைப்படுத்துவதும் அதனுடைய செயல்எல்லைக்குமான பொறுப்பு சுகாதார வைத்திய அதிகாரி / பாடசாலை வைத்திய அதிகாரி / தலைமை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரைச் சார்ந்ததாகும். தேவைக்கேற்ப வேண்டுகோள் மூலம் அவசியமான வளங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி பாடசாலை மருத்துவப் பரிசோதனைக்காக அருகிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளின் சேவையைப் பெற்றுக்கொள்வதோடு பாடசாலை மாணவர்களின் பெற்றோர், உறவினர் மற்றும் பழைய மாணவர்கள் மத்தியில் வைத்தியர்கள் இருப்பின் அவர்களது உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றிற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

கடந்த வருடத்தில் பாடசாலை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படாத பாடசாலைகளுக்கு இவ்வருடத்தில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

2. **இனங்காணப்பட்ட நோய்களுக்கான சிகிச்சையை வழங்கலும் மேற்சிகிச்சைக்காக அனுப்புதலும்.**

பாடசாலை மாணவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளிலுள்ள விசேட சிகிச்சை நிலையங்களுக்கு மேற்சிகிச்சைக்காக அனுப்பப்படலாம். இம்மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவிற்கூடாக (OPD) (பொதுச் சுற்றறிக்கை 02-32/2002) செல்ல வேண்டியதில்லை. அங்கு மாணவர்களுக்கென தனியான விசேட சிகிச்சை நிலையங்கள் இல்லாவிடின், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரியும் அவற்றை மீள் நிர்மாணிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5 - 19 வயதிற்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களின் வயதிற்கான உடற்திணிவுச்சுட்டியை அளவிடுவதற்கு "உலக சுகாதார ஸ்தாபனத்தின் அளவீட்டு தராதரத்தினை" உபயோகிக்க வேண்டும். பாடசாலை பிள்ளையின் வயதிற்கான உடற்திணிவுச்சுட்டி <-2SD ஆக காணப்படுமாயின் உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அடுத்து வரும் மிகக்கிட்டிய தினத்தில் நடைபெறும் ஏதாவது சிகிச்சை நிலையத்திற்கு பரிந்துரை செய்யப்படவேண்டும். அப்படிப்பட்ட முறைகள் பலனளிக்காதவிடத்து, அவர்கள் விசேட பராமரிப்பிற்காக பரிந்துரை செய்யப்பட வேண்டும். வயதிற்கான உடற்திணிவுச்சுட்டி > 2SD ஆக காணப்படும் பாடசாலைப் பிள்ளைகள் அல்லது தீவிரமான குருதிச்சோகை உடையவர்களெனக் கருதப்படும் பிள்ளைகளையும் விசேட பராமரிப்பிற்காக உடனடியாக பரிந்துரை செய்யப்பட வேண்டும். உடற்பருமன், குள்ளமடைதல், மெலிவடைதல், குருதிச்சோகை ஆகியவை காணப்படும் ஏனைய பிள்ளைகளுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பாடசாலை மட்டத்தில் உணவு முறை மற்றும் வாழ்க்கை முறை பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான முறைகள் பலனளிக்காதவிடத்து, அப்பிள்ளைகள் போஷாக்கு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மாணவர்களின் மனநலப் பிரச்சனைகளை அடையாளங் காண்பதற்காக குழந்தைகளுக்கான விசேட மனோ வைத்திய நிபுணர் / விசேட மனோ வைத்திய நிபுணர் அல்லது மனநல சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் உதவியுடன் உங்களது அலுவலர்களைப் பயிற்றுவியுங்கள். அடையாளங்காணப்பட்ட மாணவர்களை அப்பிரதேசத்திலுள்ள விசேட மனோ வைத்திய நிபுணரிடமோ அல்லது குழந்தை வைத்திய நிபுணரிடமோ அனுப்பி வையுங்கள்.

3. **நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்**

பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பாடசாலை மருத்துப் பரிசோதனை இடம்பெறும் தினத்திலேயே நோய்த்தடுப்பு மருந்தேற்றல் நடாத்தப்பட வேண்டும். நோய்த்தடுப்பு மருந்தினால் தூண்டப்பட்ட ஒவ்வாமை / கடும் ஒவ்வாமை போன்ற அவசர சூழ்நிலைகள் ஏற்படுமாயின் அதற்கு அவசியமான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்காக பயிற்றப்பட்ட ஒரு வைத்திய அதிகாரி / ஒரு பொதுச் சுகாதார தாதிய சகோதரி / பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் அவ்வேளையில் அங்கு இருக்க வேண்டும். மேலதிக விபரங்களிற்கு சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் 23/08/2011 திகதியிடப்பட்ட 01-20/2011 இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

நோய்த்தடுப்பு மருந்து வழங்குதல் தனியான செயற்பாடாக அல்லாமல், பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் ஒரு பகுதியாக அமைய வேண்டும். இதற்காக அவசியமேற்படின் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார தாதிய சகோதரி மற்றும் குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் பங்களிப்பையும் உதவியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

| | |
|---|---|
| DT/OPV<br>இருகூட்டு / வாய்வழிப் போலியோ மருந்து | 1ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஏற்கெனவே வழங்கப்பட்டிராவிடின். |
| aTd<br>வளர்தோருக்குரிய ஏற்புவலி, தொண்டைக்கரப்பன் தடுப்பு மருந்து. | 7ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். |
| MMR | 8ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஏற்கெனவே ருபெல்லா அடங்கிய நோய்த்தடுப்பு மருந்து வழங்கப்பட்டிராவிடின். |

வழங்கப்பட்ட சகல நோய்த்தடுப்பு மருந்துகளும் பிள்ளையின் ஆரோக்கிய விருத்திப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேணடும்.

## 4. விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் / விரிவுரைகள்

கீழ்வரும் வகுப்புகளிலுள்ள சகல மாணவர்களுக்கும் விழிப்புணர்வூட்டும் விரிவுரைகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவை கட்டாயமானவையாகும்.

| வகுப்பு | நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|
| ஆரம்ப | வாய்ச் சுகாதாரம், தொற்றாத நோய்கள், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் |
| 6-7ம் வகுப்புகள் | வாழ்க்கைத் திறன்கள் |
| 8-9ம் வகுப்புகள் | பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம், வாழ்க்கைத் திறன்கள் |
| 9ம் வகுப்பு | 9ம் வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான சுருக்கமான அறிவூட்டலை வழங்கவும். இச்சமயத்தில் பதின்ம வயதில் கருத்தரித்தலைத் தடுப்பதில் ஆசிரியர்களின் பங்கை வலியுறுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தவும்.<br><br>9ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் பற்றியும் பதின்ம வயதில் கருத்தரித்தலைத் தடுப்பது பற்றியும் கற்பிப்பது கட்டாயமானதாகும். |
| 10-11 ம் வகுப்புகள் | இனப்பெருக்க சுகாதாரம், எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிடல் மற்றும் வாழ்க்கைத் திறன்கள். |

பின்வரும் சுகாதார செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மாணவர்களை வலுவூட்டவும்

- தமது உடற்திணிவுச்சுட்டியை அளவிட்டு அதனை சீர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சுயமாகவே ஈடுபடுதல்.
- தமது பார்வைக் கூர்மையை தாமாகவே பரிசோதித்தல்.
- தமது ஆகாரத்தின் போஷாக்கினை மதிப்பிடல்.
- தமது உடற்தகைமையை அளவிடல்.

5. ஆசிரியர்களுக்கான தொற்றாத நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையங்களும், சுகவனிதையர் சிகிச்சை நிலையங்களும்.

பாடசாலை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் அதே தினத்திலேயோ அல்லது வேறு ஒரு தினத்திலேயோ ஆசிரியர்களுக்கென தொற்றாத நோய்களை ஆரம்பத்திலேயே அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகளையும் சுகவனிதையர் சிகிச்சை நிலையங்களையும் நடத்தவும். இச்செயற்பாடுகள் மூலம் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

6. பாடசாலைச் சுகாதாரத் தரவுகளைப் பதிவு செய்தல்

சுகாதாரத் தரவுகளைப் பிள்ளையின் ஆரோக்கிய விருத்திப் பதிவேட்டில் (CHDR) பதிவு செய்வது அத்தியாவசியமானதாகும்.

படிப்படியாக மாணவர் சுகாதாரப் பதிவேட்டை (H457) உபயோகிப்பதை நிறுத்தவும்.

- பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் சுருக்கத்தின் (H1247) நகலை வலயக் கல்விப் பணிப்பாளருக்கும்
- பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் சுருக்கத்தின் (H1247) நகலைப் பாடசாலை அதிபருக்கும்
- சுகாதாரப் பிரச்சனைகள் பதிவு செய்யப்பட்ட சுகாதார மருத்துவப் பரிதோதனைப் பதிவேட்டின் நகலை (H456) வகுப்பு ஆசிரியர்களுக்கு வழங்கவும்.
- அத்துடன் பாடசாலை சுகாதார ஆய்வு அறிக்கையின் (H1015A) நகலை வருடத்தின் ஆரம்பத்தில் பாடசாலை அதிபருக்கு வழங்கவும்.

குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட “பாடசாலைச் சுகாதாரத் தகவல் தொகுப்பு தொடர்பான படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டிகள் - 2015” ஐப் பார்க்கவும். 2015 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைச் சுகாதாரத் தரவுகளைப் பதிவு செய்வதற்காக புதிய திருத்தப்பட்ட படிவங்களை உபயோகிக்கவும்.

**வருடம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலைச் சுகாதார நடவடிக்கைகள்**

1. ஒவ்வொரு வாரமும் இரும்புச்சத்து, ∴போலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ குறை நிரப்பிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் (WIFS).
2. பாடசாலையில் பல் வைத்திய சேவையை வழங்குதல்.
3. நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.
4. பாடசாலை உணவகங்களை மேற்பார்வை செய்தல்.
5. விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
6. குறைபாடுள்ளோரை தொடர் கண்காணித்தல்.

1. இரும்புச்சத்து, ∴போலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ குறை நிரப்பிகளை வாரந்தோறும் வழங்கும் வேலைத்திட்டத்தை மேற்பார்வை செய்தல் (WIFS).

சுகாதார அமைச்சின் 02-08/2007(1) இலக்கத்தைக் கொண்ட 2013/03/25 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின்படியும், அதற்கு இணையான கல்வி அமைச்சின் 2013/01 இலக்கத்தைக் கொண்ட 2013/06/03 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின்படியும், 1-13 ஆம் வகுப்பு வரையிலுள்ள சகல மாணவர்களுக்கும் ∴பெரஸ் சல்பேற், ∴போலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ ஒரு மாத்திரை வீதம் வழங்கப்பட வேண்டும். இக்குறைநிரப்பிகளை வழங்குதல் ஒவ்வொரு வருடத்தினதும் முதற் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும், 24 வாரங்களுக்கு (6 மாதங்களுக்கு) வழங்கப்பட வேண்டும். கொடுக்கப்படவேண்டிய சரியான அளவு, ∴பெரஸ் சல்பேற் 200 மி.கி., ∴போலிக்கமிலம் 1 மி.கி., உயிர்ச்சத்து சீ 100 மி.கி. ஆகும். இதற்கு முன்பு ∴போலிக்கமிலம் 2 மி.கி. வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய ∴போலிக்கமிலத்தின் அளவு 1 மி.கி. ஆகக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

குறை நிரப்பிகளை வழங்க ஆரம்பிக்கும் போது சகல மாணவர்களுக்கும் மெபன்டசோல் 500 மி.கி. மாத்திரை ஒன்று வழங்கப்படும். ஊவா, சப்பிரகமுவ, மத்திய, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மாணவர்களுக்கு 24 வாரங்களின் முடிவில் மேலதிகமான மெபன்டசோல் மாத்திரை ஒன்று வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

2. பாடசாலையில் பல் வைத்திய சேவையை வழங்குதல்

பாடசாலைப் பல் வைத்திய சேவையானது, பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டாயமான ஒரு பகுதியாகும். இச்சேவையானது, பல் வைத்தியர்களினாலும், பாடசாலைப் பற்சிகிச்சையாளர்களினாலும் வழங்கப்பட வேண்டும். பாடசாலையில் பல் வைத்திய சேவைகள் இல்லாதவிடத்து வைத்திய அதிகாரி பல் சம்பந்தப்பட்ட நோய்கள் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களை அருகிலுள்ள பாடசாலை பற்சிகிச்சை நிலையத்திற்கோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கோ அல்லது வைத்தியசாலைக்கோ சிகிச்சைக்காக அனுப்பி வைக்க வேண்டும்.

இதைப்பற்றிய மேலதிக விபரங்களை FHB/OHU/SDS/2011/02 இலக்கத்தைக் கொண்ட 2011/11/26 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலைச் சுற்றாடல் வாரத்திற்கு ஒரு முறை சோதித்துப் பார்க்கப்பட்டு, நுளம்புக் குடம்பிகள் மற்றும் நுளம்பு பெருகும் இடங்கள் இல்லாதிருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

4 பாடசாலை உணவகத்தை மேற்பார்வை செய்தல்

பாடசாலைகள், பிரிவேனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களிலுள்ள உணவகங்களை உணவகங்களிற்கான மேற்பார்வை படிவம் H800ஐ உபயோகித்து மேற்பார்வை செய்யவும். பின்பு உணவகங்களைத் தொடர்ந்து பார்வையிடுவதன் மூலம் அவற்றைத் தரமுயர்த்த முயற்சிக்கவும்.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2011/03 இலக்கத்தைக் கொண்ட 2011/01/18 திகதியிடப்பட்ட உணவகத்திற்கான சுற்றறிக்கையில் மேலதிக வழிகாட்டல்கள் காணப்படுகின்றன.

“பாடசாலை உணவகத்தில் இருக்கக்கூடாத உணவுகளின் பட்டியலும்” உணவைத் தெரிவு செய்வதற்கான “போக்குவரத்து சமிக்ஞை விளக்கு வர்ணச் சுவரொட்டியும்” உணவகத்தில் காட்சிக்கு வைக்கப்படுவதை உறுதி செய்யவும்.

உணவகத்திற்கான கொள்கைகளுக்கு மாறான செயற்பாடுகள் இடம்பெறுமாயின் அதைக் குறித்த தகவல்களை கல்வி அமைச்சின் சுகாதார மற்றும் போஷாக்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்கும், குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பாடசாலை சுகாதாரப் பிரிவிற்கும் எழுத்து மூலம் அறியத்தரவும்.

5 பாடசாலை சுகாதார தினத்தன்று மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை விட தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பாடசாலை சமூகத்தினருக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தவும்.

6. தொடர் கண்காணிப்பின் போது தாம் செல்ல வேண்டிய விசேட சிகிச்சை நிலையங்களுக்கு செல்லத் தவறிய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களைச் சிகிச்சையைப் பெறும்படியாக ஊக்குவிக்க வேண்டும். இருதய நோயுடையோர் என சந்தேகிக்கும் பெண்பிள்ளைகளை தாய்மார்களின் இறப்பிலிருந்து அவர்களை பாதுகாக்கும் நோக்கில் தொடர் கண்காணிப்பிற்காக விசேட பராமரிப்பு எடுக்கப்பட வேண்டும்.

<u>பாடசாலை சுகாதாரச் செயற்குழுக்கள்</u> (செயற்குழுக்களின் அமைப்பு, பொறுப்புகள், ஸ்தாபனத்தின் பொறுப்புகள், சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு பின்னிணைப்பு C ஐப் பார்க்கவும்.)

1. பாடசாலை சுகாதாரக் கழகம்
2. பாடசாலை சுகாதார ஆலோசனைக்குழு
3. கோட்ட பாடசாலை சுகாதார மேம்பாட்டுச் செயற்குழு
4. வலய பாடசாலை சுகாதார மேம்பாட்டுச் செயற்குழு
5. மாகாண பாடசாலை சுகாதார மேம்பாட்டுச் செயற்குழு
6. பாடசாலை சுகாதாரத்திற்கான தேசிய ஒருங்கிணைப்புச் செயற்குழு (தொழிற்பாட்டுக் குழு)
7. பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்கான தேசிய மட்டச் செயற்குழு

இவற்றைப்பற்றிய மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தினாலும் கல்வி அமைச்சின் சுகாதார மற்றும் போஷாக்குப் பிரிவினாலும் வெளியிடப்பட்ட 'சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைகளுக்கான வழிகாட்டி' எனும் கைநூலையும் 'பாடசாலை சுகாதாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்' எனும் கைநூலையும் பார்க்கவும்.

**பாடசாலை சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தினைக் கண்காணித்தலும் துணைவலிமை கொடுத்தலும்**

பாடசாலை மருத்துவப் பரிசோதனையை 100% மேற்கொள்வதற்கான எமது இலக்கை எய்துவதற்கு சகல மட்டங்களிலும் கண்காணித்தலும், துணைவலிமை கொடுத்தலும் இடம்பெற வேண்டும். சுகாதார அமைச்சுக்கும் கல்வி அமைச்சுக்கும் இடையிலான கூட்டுச் செயற்பாடானது சுகாதார மேம்பாட்டுச் செயற்குழுக்களின் வாயிலாகவும் அடையப்படும்.

இச்சுற்றறிக்கையில் உள்ளடங்கியுள்ள தகவல்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் உங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கும் அறியத்தரவும். அவர்கள் அவ் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதை உறுதி செய்யவும்.

நன்றி.

Anura Jayawickrama
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha.
Colombo 10, Sri Lanka.

---------------------------------------------
திரு. அனுர ஜயவிக்கிரம
செயலாளர் / சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

பிரதிகள் :

செயலாளர் / கல்வி அமைச்சு
மேலதிக செயலாளர் (மருத்துவ சேவைகள்) / சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
மேலதிக செயலாளர் (கல்வித்தர அபிவிருத்திப் பிரிவு), கல்வி அமைச்சு
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொதுச் சுகாதார சேவைகள் II), சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்), சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
பணிப்பாளர், தாய், சேய் நல சுகாதாரப் பிரிவு, குடும்ப சுகாதாரப் பணியகம்
பணிப்பாளர், சுகாதாரக் கல்விப் பணியகம்
தலைமைத் தொற்றுநோயியலாளர், தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு
கல்விப் பணிப்பாளர், சுகாதாரம், போஷாக்கு, கல்வி அமைச்சு
கல்விப் பணிப்பாளர், விளையாட்டுத்துறை, கல்வி அமைச்சு
செயலாளர், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்
செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
செயலாளர், கால்நடை அபிவிருத்தி அமைச்சு
செயலாளர், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு
செயலாளர், கமத்தொழில் அமைச்சு
செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சு
தலைவர், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை
தலைவர், இலங்கை குழந்தை மருத்துவ நிபுணர்களின் சங்கம்

## பின்னிணைப்பு - A

<u>பங்குதாரர்களினால் பாடசாலை சுகாதார செயற்பாடுகள் திட்டமிடப்படலும் அமுல்படுத்தப்படலும்</u>

A. பாடசாலை சுகாதார நடவடிக்கைகளைத் திட்டமிட்டுள்ள சுகாதார அமைச்சின் சகல பணிப்பாளர்களும் அத்திட்டங்களைப் பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் மத்திய ஒருங்குநிலை நிறுவனமான குடும்ப சுகாதாரப் பணியகத்தின் தாய், சேய் நல சுகாதாரப் பணிப்பாளருக்கூடாக அதற்கு முந்திய வருடம் ஐப்பசி மாதம் 1ம் திகதிக்கு முன்னராக கல்வி அமைச்சின் ஒருங்குநிலைப் பணிப்பாளரான சுகாதார மற்றும் போஷாக்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்கு அறியத்தரல் வேண்டும்.

B. இவ்வாறான சகல பாடசாலை சுகாதாரச் செயற்பாடுகளும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கூடாக, சுகாதார வைத்திய அதிகாரி / பாடசாலை வைத்திய அதிகாரி / மாநகரசபைப் பிரதேசத்தின் தலைமை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரினால் அமுல்படுத்தப்பட வேண்டும். அமுல்படுத்தும் மட்டத்தில் இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மேற்கூறிய அதிகாரிகள் அறியாமல் பாடசாலையினுள் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதனைத் தவிர்ப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

C. கல்வி அமைச்சின் தேசிய மட்டச் செயற்குழுவினால் அங்கீகரிக்கப்படாத மற்றும் மாகாண கல்வித்துறை அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் / பிரச்சாரங்கள் மற்றும் தனியாரினால் பாடசாலை சுகாதாரச் செயற்பாடுகள் பாடசாலைகளில் நடாத்தப்பட முடியாது.

D. இவ்வாறான அங்கீகாரம் பெறாத செயற்பாடுகள் இடம்பெறும் போது, சுகாதார வைத்திய அதிகாரிகளோ அல்லது ஏனைய அரசாங்க வைத்திய அதிகாரிகளோ அவற்றிற்கு அனுசரணை வழங்கவோ அல்லது அவற்றில் பங்கு பெறவோ கூடாது. இவ்வாறான சம்பவங்கள் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளரினதும் கல்வி அமைச்சின் சுகாதார மற்றும் போஷாக்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளரினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு - B

<u>பாடசாலை மருத்துவப் பரிசோதனை</u>

**A**. பாடசாலை மருத்துவப் பரிசோதனையானது சகல அரசாங்க பாடசாலைகள், சிறப்புக் கல்விப் பிரிவுகள், பிரிவேனைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் ஆகியவற்றில் வருடாந்தம் நிகழ்த்தப்பட வேண்டும்.

**B.** 200 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட சகல பாடசாலைகளிலும் $1^{ம்}, 4^{ம்}, 7^{ம்}, 10^{ம்}$ வகுப்புகளிலுள்ள சகல மாணவர்களுக்கும், சிறப்புக் கல்விப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கும் பாடசாலை மருத்துவப் பரிசோதனையானது ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட வேண்டும். 200 அல்லது அதற்கும் குறைந்த எண்ணிக்கையுடைய மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் சகல மாணவர்களுக்கும் ஒவ்வொரு வருடமும் பாடசாலை மருத்துவப் பரிசோதனையானது நடாத்தப்பட வேண்டும்.

**C.** கடந்த வருடத்தில் பாடசாலை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படாத பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

**D.** இப்பரிசோதனையை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அதனுடைய செயல்எல்லைக்குமான பொறுப்பு சுகாதார வைத்திய அதிகாரி / பாடசாலை வைத்திய அதிகாரி / தலைமை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரைச் சார்ந்ததாகும். சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்வதும் ஒருங்கிணைப்பதுமான பொறுப்பு அப்பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைச் சார்ந்ததாகும்.

**E.** இந்நிகழ்ச்சித் திட்டமானது அப்பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால், சுகாதார வைத்திய அதிகாரி, மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அப்பிரதேசத்தின் பாடசாலை அதிபர்கள், வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்த பின் திட்டமிடப்பட வேண்டும். இதற்கமைய பாடசாலை சுகாதாரத்திற்கான காலாண்டுக்கான முன்கூட்டிய திட்டம் (H1016) தயாரிக்கப்பட வேண்டும்.

**F.** திட்டமிடப்பட்ட பாடசாலை சுகாதாரச் செயற்பாடுகள் கல்வி அமைச்சின் மாகாண, வலய மற்றும் கோட்டப் பணிப்பாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு அவை மாகாண சுகாதார மற்றும் மாகாண கல்வித்துறை அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும்.

**G.** கல்வி அமைச்சானது பாடசாலை மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளும் தினத்தினை “பாடசாலை சுகாதார தினம்” எனப் பிரகடனப்படுத்துவதற்கு உடன்பட்டுள்ளது. இத்தினத்தில் ஏனைய சுகாதார அலுவலர்களுடனும் (நோய் சிகிச்சை மற்றும் நோய்த்தடுப்புப் பிரிவுகள்) பாடசாலை சமூகத்தினருடனும் இணைந்து சகல பாடசாலை சுகாதார செயற்பாடுகளும் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும்.

**H.** பாடசாலை மருத்துவப் பரிசோதனையை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள தினத்திற்குக் குறைந்தது 2 வாரங்களுக்கு முன்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பாடசாலைக்குச் சமூகமளித்து பாடசாலை அதிபருக்கு பாடசாலை மருத்துவப் பரிசோதனை மற்றும் நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை பற்றி மீண்டும் ஞாபகமூட்ட வேண்டும். மேலும் அதிபர் $1^{ம்}$ வகுப்பிலுள்ள சகல மாணவர்களினதும் பெற்றோரும் ஏனைய வகுப்புகளிலுள்ள சுகாதாரப் பிரச்சனைகளையுடைய மாணவர்களின் பெற்றோரும் அத்தினத்தில் சமூகமளிக்க வேண்டுமென அறிவிக்க வேண்டும்.

**I**. பாடசாலை அதிபர், பிள்ளையின் ஆரோக்கிய விருத்திப் பதிவேட்டை அனுப்பி வைக்கும்படியாகவும், நோய்த்தடுப்பு மருந்தை வழங்குவதற்கான ஒப்புதலை (எழுத்து மூலமான ஒப்புதல் விரும்பப்படத்தக்கது) வழங்கும்படியாகவும் பெற்றோரைக் கோருதல் வேண்டும்.

**I**. பாடசாலை அதிபர், பிள்ளையின் ஆரோக்கிய விருத்திப் பதிவேட்டை அனுப்பி வைக்கும்படியாகவும், நோய்த்தடுப்பு மருந்தை வழங்குவதற்கான ஒப்புதலை (எழுத்து மூலமான ஒப்புதல் விரும்பப்படத்தக்கது) வழங்கும்படியாகவும் பெற்றோரைக் கோருதல் வேண்டும்.

**J**. பாடசாலை மருத்துவப் பரிசோதனை நடைபெறும் தினத்திற்கு முன்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் சுகாதாரப் பிரச்சனைகளைக் கண்டறிவதற்கான ஆய்வு நிறைவேற்றப்பட வேண்டும்.

K. பாடசாலை மருத்துவப் பரிசோதனையானது எப்போதும் சுகாதார வைத்திய அதிகாரி / மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி / வைத்திய அதிகாரி / பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி அல்லது உதவி வைத்திய அதிகாரி ஆகியோரினால் நடாத்தப்பட வேண்டும். அவசியமேற்படும் போது நோய்களைக் கண்டறிவதற்கான ஆய்வின் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கண்டறியப்பட்டவைகள் உறுதி செய்யப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**L.** நோய்த்தடுப்பு மருந்தேற்றலானது தனியான செயற்பாடாக அல்லாமல் வைத்திய பரிசோதனையின் ஒரு பகுதியாக இடம்பெற வேண்டும். பாடசாலை மருத்துவப் பரிசோதனை நடாத்தப்படும் தினத்திலே பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் நோய்த்தடுப்பு மருந்தேற்றும் செயற்பாடு நடாத்தப்பட வேண்டும். பெரும் எண்ணிக்கையான மாணவர்களுக்கு நோய்த்தடுப்பு மருந்து ஏற்ற வேண்டியிருப்பின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார தாதிய சகோதரி, குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**M.** நோய்த்தடுப்பு மருந்தினால் தூண்டப்பட்ட ஒவ்வாமை / கடும் ஒவ்வாமை போன்ற அவசர சூழ்நிலைகள் ஏற்படுமாயின் அதற்கு அவசியமான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்காக பயிற்றப்பட்ட ஒரு வைத்திய அதிகாரி / ஒரு பொதுச் சுகாதார தாதிய சகோதரி / பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் அவ்வேளையில் அங்கு இருக்க வேண்டும். மேலதிக விபரங்களிற்கு சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் வெளியிடப்பட்ட 23.08.2011 திகதியிடப்பட்ட 01-20/2011 இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| DT/OPV<br>இரு கூட்டு / வாய்வழிப் போலியோ மருந்து | 1ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஏற்கெனவே வழங்கப்பட்டிராவிடின் |
| aTd<br>வளர்ந்தோருக்குரிய ஏற்பு வலி, தொண்டைக்கரப்பன் தடுப்பு மருந்து | 7ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். |
| MMR | 8ம் வகுப்பிலுள்ள சகல மாணவர்களுக்கும் வழங்கப்படவேண்டும். ஏற்கெனவே ருபெல்லா அடங்கிய நோய்த்தடுப்பு மருந்து வழங்கப்பட்டிராவிடின். |

**N.** வழங்கப்பட்ட சகல நோய்த்தடுப்பு மருந்துகளும் பிள்ளையின் ஆரோக்கிய விருத்திப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

**O.** உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட நோய்த்தடுப்பு மருந்து அறிக்கையானது அடுத்து வரும் காலாண்டின் முதல் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்பாக நோய்த்தடுப்பு மருந்தேற்றலுக்கான காலாண்டறிக்கையில் உள்ளடக்கப்படும்படியாக பொதுச் சுகாதார தாதிய சகோதரியிடம் கையளிக்கப்பட வேண்டும்.

**P.** பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் தமது உடற்திணிவுச்சுட்டியை அளவிடுதல், தமது சொந்த ஆகாரத்தின் போஷாக்கு நிலையை மதிப்பிடல், தமது பார்வைக் கூர்மையைத் தாமாகவே பரிசோதித்தல், தமது உடற்தகைமையை அளவிடல் மற்றும் அவற்றைச்

சீர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சுயமாக ஈடுபடல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு வலுவூட்டப்பட வேண்டும்.

**Q.** பாடசாலை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தினத்தன்று பாடசாலைக்குச் சமூகமளிக்காத மாணவர்களைப் பாடசாலையில் வேறொரு தினத்திலோ அல்லது சனிக்கிழமைகளில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடாத்தப்படும் மத்திய சிகிச்சை நிலையத்திலோ பரிசோதித்து அவசியமான சேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

**R.** பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் போது இனங்காணப்பட்ட, குறைபாடுகளை உடைய மாணவர்களை, பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலை சுகாதார மேற்பரிசீலனை அட்டைகளுடன் (H606) அருகாமையிலுள்ள சுகாதார நிலையத்தின் தொடர்புடைய விசேட நிபுணத்துவ சிகிச்சை நிலையங்களுக்கு மேற்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கவும். இம்மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவினூடாகச் செல்ல வேண்டியதில்லை.

**S.** கற்றல் மற்றும் நடத்தைப் பிரச்சனைகளையுடைய மாணவர்களை அருகாமையிலுள்ள வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணரிடமோ அல்லது மனநல சிகிச்சை நிலையத்தின் வைத்திய அதிகாரியிடமோ அனுப்பி வைக்கவும்.

**T.** வெளிநோயாளர் பிரிவுக்கும் விசேட நிபுணத்துவ சிகிச்சை நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு வைத்தியசாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். (பொதுச் சுற்றறிக்கை இல. 02-32/2002). இம்மாணவர்களை வரிசையிலோ அல்லது சிகிச்சை நிலையங்களிலோ காத்திருக்க வைக்கக்கூடாது. சனிக்கிழமைகளிலோ அல்லது கிழமை நாட்களில் மாலை நேரங்களிலோ பாடசாலை மாணவர்களுக்காக வைத்தியசாலைகளில் விசேட நிபுணத்துவ சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்பட வேண்டும்.

**U.** 5 - 19 வயதிற்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களின் வயதிற்கான உடற்திணிவுச்சுட்டியை அளவிடுவதற்கு "உலக சுகாதார ஸ்தாபனத்தின் அளவீட்டு தராதரத்தினை" உபயோகிக்க வேண்டும். பாடசாலை பிள்ளையின் வயதிற்கான உடற்திணிவுச்சுட்டி ஈ-2ளுனு ஆக காணப்படுமாயின் உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அடுத்து வரும் மிகக்கிட்டிய தினத்தில் நடைபெறும் ஏதாவது சிகிச்சை நிலையத்திற்கு பரிந்துரை செய்யப்படவேண்டும். அப்படிப்பட்ட முறைகள் பலனளிக்காதவிடத்துஇ அவர்கள் விசேட பராமரிப்பிற்காக பரிந்துரை செய்யப்பட வேண்டும். வயதிற்கான உடற்திணிவுச்சுட்டி , 2ளுனு ஆக காணப்படும் பாடசாலைப் பிள்ளைகள் அல்லது தீவிரமான குருதிச்சோகை உடையவர்களெனக் கருதப்படும் பிள்ளைகளையும விசேட பராமரிப்பிற்காக உடனடியாக பரிந்துரை செய்யப்பட வேண்டும். உடற்பருமன்இ குள்ளமடைதல்இ மெலிவடைதல்இ குருதிச்சோகை ஆகியவை காணப்படும் ஏனைய பிள்ளைகளுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பாடசாலை மட்டத்தில் உணவு முறை மற்றும் வாழ்க்கை முறை பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான முறைகள் பலனளிக்காதவிடத்துஇ அப்பிள்ளைகள் போஷாக்கு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**V.** H1247 இன் பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் H 1247, H 1015A ஆகியவற்றின் பிரதிகளைப் பாடசாலையின் அதிபருக்கும் H 456 இன் பிரதியை வகுப்பாசிரியர்களுக்கும் வழங்கி, குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்து கொள்ளவும்.

**W.** பாடசாலை மருத்துவப் பரிசோதனையின் பின்னர் தொடர் கண்காணிப்பை மேற்கொள்வதற்காக குறைந்தது ஒரு மாதத்தின் பின்பும், 3 மாதங்களின் பின்பும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பாடசாலைக்கு விஜயம் செய்ய வேண்டும்.

**X.** தொடர் கண்காணிப்பின் போது தாம் செல்ல வேண்டிய விசேட சிகிச்சை நிலையங்களுக்கு செல்லத் தவறிய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களைச் சிகிச்சையைப் பெறும்படியாக ஊக்குவிக்க வேண்டும். இருதய நோயுடையோர் என சந்தேகிக்கும் பெண்பிள்ளைகளை தாய்மார்களின் இறப்பிலிருந்து அவர்களை பாதுகாக்கும் நோக்கில் தொடர் கண்காணிப்பிற்காக விசேட பராமரிப்பு எடுக்கப்பட வேண்டும்.

**Y.** கண்ணாடி அல்லது செவித்துணைக் கருவி தேவைப்படும் மாணவர்களை அச்சீட்டுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சிறப்புக் கல்விப் பணிப்பாளரிடமோ அல்லது பிரதேச செயலாளர் காரியாலயத்திலுள்ள சமூக சேவைகள் அலுவலரிடமோ கண்ணாடி அல்லது செவித்துணைக் கருவியைப் பெற்றுக்கொள்ளும்படியாக அனுப்பி வைக்க வேண்டும். சுகாதார அமைச்சின் VISION 2020 பணியகத்தின் மூலம் இலவசமாக கண்ணாடியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் அதற்கான முறைமையையும் ஆசிரியர்களுக்கு அறியத்தரவும்.

**Z.** பாடசாலை மருத்துவப் பரிசோதனை இடம்பெறும் அதே தினத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டிய ஏனைய செயற்பாடுகளாவன, நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், பாடசாலை உணவகங்களைப் பார்வையிடல், இரும்புச்சத்து, ∴போலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ குறை நிரப்பிகளை வாரந்தோறும் வழங்கும் வேலைத்திட்டத்தை மேற்பார்வை செய்தல் (WIFS), ஆசிரியர்களுக்கான தொற்றாத நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையம் / சுகவனிதையர் சிகிச்சை நிலையம் ஆகியவற்றை நடாத்துதல் ஆகியவையாகும்.

**AA.** பாடசாலை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் தினத்தன்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களையும் விரிவுரைகளையும் நிகழ்த்தவும்.

**BB.** சகல பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் ஒவ்வொரு மாத இறுதியிலும் பாடசாலை சுகாதாரத்திற்கான மாதாந்த அறிக்கையைத் (H1014) தயாரித்து, பிரதான தாளை (master sheet) (H1014) தயாரிப்பதற்காக மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கையளிக்க வேண்டும்.

**CC.** ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிதோதகர் காலாண்டு அறிக்கையை ( H797) தயாரித்து அதன் பிரதிகளை அடுத்துவரும் காலாண்டின் முதல் மாதத்தின் 20ம் திகதிக்கு முன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், தாய், சேய் நல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

**DD.** உரிய நேரத்தில் அறிக்கைகளை அனுப்பி வைப்பது கட்டாயமானதாகும்.

| |
|---|
| குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட “பாடசாலை சுகாதாரத் தகவல் தொகுப்பு தொடர்பான படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டிகள் - 2015” ஐப் பார்க்கவும். 2015 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை சுகாதாரத் தரவுகளைப் பதிவு செய்வதற்காக புதிய திருத்தப்பட்ட படிவங்களை உபயோகிக்கவும். |

## பின்னிணைப்பு C

## பாடசாலை சுகாதாரக் குழு

1. பாடசாலை சுகாதாரக் கழகம்

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| **கல்வித்துறை**<br><br>அதிபர் (தலைவர்)<br><br>மாணவர்களிலிருந்து<br>தலைவர்<br>உபதலைவர்<br>இணைச்செயலாளர்கள்<br>பொருளாளர்<br>செயற்குழு உறுப்பினர்<br><br>அங்கத்துவம்<br>எத்தனை மாணவர்களும் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்<br><br>உப குழுக்கள்<br>பாடசாலையின் தேவைக்கமைய உப குழுக்கள் அமைக்கப்படலாம்.<br><br>ஆலோசகர்கள்<br>உப அதிபர் (சுகாதாரம்)<br>பிரிவுத் தலைவர்<br>பொறுப்பாசிரியர் (சுகாதாரம்)<br>ஏனைய ஆசிரியர்கள்<br>(சுகாதாரம் /உடற்கல்வி / வாழ்க்கைத் திறன்கள் / விஞ்ஞானம் / ஏனையவை) | பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பாடசாலைச் சுகாதாரச் செயற்பாடுகளைத் திட்டமிடலும் இடையீட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்தலும். | பாடசாலை அதிபர் | மாதாந்த மேற்பார்வை - மேற்பார்வை செய்யும் ஆசிரியர்களும் செயற்குழு அங்கத்தினரும்<br><br>காலாண்டுக்கான மேற்பார்வை - அதிபர், ஆசிரியர்கள், செயற்குழு அங்கத்தினர்<br><br>வருடாந்த மேற்பார்வை - அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் |

**முன்னுரிமை வழங்கப்படவேண்டிய செயற்பாடுகள்**

பாடசாலை சுகாதார மேம்பாட்டுக் கொள்கையைத் தயாரித்தல்

சுகாதார மேம்பாட்டுக்கான வருடாந்த செயற்திட்டத்தைத் தயாரித்தலும் பாடசாலை சுகாதாரக் கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதலும் அதனை அமுல்படுத்தலும்.

"பள்ளி இடை நிற்கும்" மாணவர்களின் எண்ணிக்கையை முடிந்தளவு குறைப்பதற்கான ஒரு முறைமையை வடிவமைத்தல்.

பாடசாலை மாணவர்களின் உடற்திணிவுச்சுட்டி, போஷாக்கு நிலை, பார்வைக் கூர்மை, உடற்தகைமை ஆகியவற்றைக் கண்காணித்தல்.

வருடாந்தம் பாடசாலை சுகாதார தினத்தை நடத்துதல்.

## பாடசாலை சுகாதாரக் கழகத்தின் வருடாந்த செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவை

a) பாடசாலை சுகாதாரக் கழகத்தின் மாதாந்தக் கூட்டங்கள்
b) விசேட நிகழ்வுகளான விருந்தினர் உரை, குழுக் கலந்துரையாடல்கள், பாத்திரமேற்று நடித்தல், உரையாடல்கள், குறு நாடகங்கள், திரைப்பட நிகழ்ச்சிகள், இணைநிலையினருக்கிடையிலான கலந்தறிதல் முதலியவற்றை நடத்துதல்.
c) தினமும் பொது அறிவிப்பு அமைப்புகளினூடாக சுகாதார உரைகளை நிகழ்த்துதல்.
d) சுகாதாரம் தொடர்பான போட்டிகளாகிய நாடகங்கள், ஓவியக் கண்காட்சிகள், உரைகள், விவாதங்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்தல்.
e) சுகாதார மேம்பாட்டுக்கான "சுவர் செய்தித்தாள்களைத்" தொடர்ந்து பேணுதல்.
f) ஆரோக்கியமான உணவகத்திற்கான கொள்கையை அமுல்படுத்துவதற்கு உதவுதல்.
g) சுகாதார வள மையத்தை உருவாக்கி துண்டுப்பிரசுரங்கள், வீடியோ, சுவரொட்டிகள், செய்தித்தாள் கட்டுரைகள் ஆகியவற்றைப் பாவனைக்காக வைத்தல்.
h) இணை நிலையினருக்கிடையிலான அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
i) வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பாடசாலையில் முரண்பாடுகள், வன்முறை, துஷ்பிரயோகம், பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகள் ஆகியவற்றை முடிந்தளவு குறைத்தலும் குழுவாக வேலை செய்தலை மேம்படுத்தலும்.
j) ஒவ்வொரு வாரமும் இரும்புச்சத்து, ஃபோலிக்கமிலம், உயிர்ச்சத்து சீ குறை நிரப்பிகளை மாணவர்களுக்கு வழங்குவதில் ஆசிரியர்களுக்கு உதவுதல்.
k) பாடசாலை சுகாதார ஆய்வின் போது இனங்காணப்பட்ட பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
l) சரியான முறையில் கழிவுகளை அகற்றுதல் / மீள் சுழற்சிக்காக வழங்குதல் மற்றும் சுற்றாடலை சுத்தமாகப் பேணுதல்.
m) நுளம்பினால் பரவும் டெங்கு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதில் உதவுதல்.
n) பாடசாலையில் குடிப்பதற்கு ஏற்ற பாதுகாப்பான நீரை வழங்குவதற்கு உதவுதல்.
o) பாடசாலை மலசலகூடங்களைத் துப்பரவாகப் பேணுவதில் உதவுதல்.
p) பாடசாலை மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு உதவியளித்தல்.
q) சுகாதாரப் பிரச்சனைகளுக்கான பாடசாலை மருத்துவப் பரிசோதனை பதிவேட்டிலுள்ள (H456) தரவுகளை ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம், பாடசாலையில் இனங்காணப்பட்ட சுகாதாரப் பிரச்சனைகளைக் கண்டறிதல்.
r) அதற்கிணங்க விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
s) குறைபாடுடைய மாணவர்களைத் தொடர்ந்து கண்காணித்தல்
t) ஆரோக்கியமான சுகாதார பழக்கவழக்கங்களைக் கைக்கொள்வதற்குப் பாடசாலை சமூகத்தினரை ஊக்குவித்தல்.
u) பகல் உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உதவியளித்தல்
v) முதலுதவி மையங்களைப் பேணுதலும் தேவையேற்படும் போது முதலுதவி வழங்கலும்.

2. <u>பாடசாலை சுகாதார ஆலோசனைக் குழு</u>

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| **கல்வித்துறை**<br><br>அதிபர் (தலைவர்)<br>உப அதிபர்- சுகாதாரக் கல்வி<br>உப அதிபர்- ஆரம்பக் கல்வி<br>பிரிவுத் தலைவர்கள்<br>ஆசிரியர்- சுகாதாரக் கல்வி<br>மற்றும் (அதிபரினால் தீர்மானிக்கப்பட்டபடி)<br><br>ஏனைய ஆசிரியர்கள் (உடற்கல்வி / வாழ்க்கைத் திறன்கள்/ விஞ்ஞானம் / ஏனையவை<br><br>மாணவ பிரதிநிதிகள்<br>தலைவர்<br>செயலாளர்<br>பொருளாளர்<br><br>பெற்றோரிலிருந்து பிரதிநிதிகள்<br><br>**சுகாதாரத்துறை**<br><br>பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்<br><br>**ஏனையவை**<br><br>சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>நலன் விரும்பிகள் | பாடசாலை சுகாதாரக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட பாடசாலைச் சுகாதாரத் திட்டத்தை அங்கீகரித்தல்.<br><br>வளங்களை ஒன்று திரட்டுவதற்கான ஆதரவினை வழங்கல்.<br><br>பாடசாலை சுகாதாரக் கழகத்தின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டல்களை வழங்கல்<br><br>பாடசாலை சுகாதாரச் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் அவற்றிற்கான பின்னூட்டலை வழங்கலும். | அதிபர்<br><br>பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் | காலாண்டு மேற்பார்வை - அதிபர், செயற்குழு அங்கத்தினர்<br><br>வருடாந்த மேற்பார்வை – அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் |

3. <u>கோட்ட பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுச் செயற்குழு</u>

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| **கல்வித்துறை**<br><br>கோட்டக் கல்விப் பணிப்பாளர் (தலைவர்)<br><br>கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் (சுகாதாரமும் போஷாக்கும்)<br><br>கோட்டக் கல்வி அலுவலகத்திலுள்ள ஏயைய உத்தியோகத்தர்கள் அதிபர்கள்<br><br>**சுகாதாரத்துறை**<br><br>சுகாதார வைத்திய அதிகாரி / மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகா் சுகாதாரக் கல்வி உத்தியோகத்தா்<br><br>**ஏனையவை**<br><br>சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தா் | பாடசாலை சுகாதார மேம்பாட்டை மதிப்பீடு செய்வதற்கென வழங்கப்பட்டுள்ள சரிபார்ப்புப் பட்டியலின்படி பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்தல்<br><br>பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கான பின்னூட்டல்களை வழங்குதல் | கோட்டக் கல்விப் பணிப்பாளர் | ஆறு மாதத்திற்கு ஒரு முறையிலான மேற்பார்வை<br><br>சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைகளின் அதிபர்கள் முன்னேற்ற அறிக்கையைச் சமா்ப்பிக்க வேண்டும்.<br><br>கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சுகாதார வைத்திய அதிகாரியும் மேற்பார்வையை நடத்த வேண்டும் |

4. வலய சுகாதார மேம்பாட்டுச் செயற்குழு

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| **கல்வித்துறை**<br><br>வலயக் கல்விப் பணிப்பாளர் (தலைவர்)<br><br>வலய சுகாதார மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பாகவுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>கோட்டக் கல்விப் பணிப்பாளர்<br>கணக்காளர் (வலயக் கல்வி அலுவலகம்)<br><br>நான்கு அதிபர்கள் (1AB, 1C, Type 2, Type 3 பாடசாலைகளிலிருந்து ஒவ்வொரு அதிபர்)<br><br>**சுகாதாரத்துறை**<br><br>தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரி<br>பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகள்.<br>(உ+ம்: பிராந்திய தொற்று நோயியலாளர், பிராந்திய பல் வைத்திய அதிகாரி)<br>சுகாதார வைத்திய அதிகாரிகள்,<br>மாவட்ட மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்<br><br>**ஏனையவை**<br><br>சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | பாடசாலைச் சுகாதார மேம்பாட்டை மதிப்பீடு செய்வதற்கென வழங்கப்பட்டுள்ள சரிபார்ப்புப் பட்டியலின்படி பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்தல்<br><br>பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கான பின்னூட்டல்களை வழங்குதல்.<br><br>தங்கப் பதக்கத்தைப் பெறுவதற்கான தகுதியையுடைய பாடசாலைகளின் பட்டியலை கல்வி அமைச்சிற்கு வழங்குதல் | வலயக் கல்விப் பணிப்பாளர் | வருடாந்த மேற்பார்வை<br><br>கோட்டக் கல்விப் பணிப்பாளர் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாண சமுதாய மருத்துவ நிபுணர் அல்லது தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் மேற்பார்வையை மேற்கொள்ள வேண்டும். |

வலயத்தினுள் பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுச் செயற்பாடுகளின் கண்காணிப்பு அறிக்கையின் பின்னூட்டலானது கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போஷாக்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5 மாகாண பாடசாலை சுகாதார மேம்பாட்டுச் செயற்குழு

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| **கல்வித்துறை**<br><br>மாகாணக் கல்விச் செயலாளர் (தலைவர்)<br>மாகாணக் கல்விப் பணிப்பாளர்<br>மாகாணப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்- (சுகாதாரம் மற்றும் போஷாக்கு)<br><br>கணக்காளர் (மாகாணக் கல்வித் திணைக்களம்)<br><br>**சுகாதாரத்துறை**<br><br>மாகாண சுகாதாரச் செயலாளர்<br>மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது சமுதாய மருத்துவ நிபுணர்<br>பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்<br>தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரிகள்<br>மாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்<br>மாகாண சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்<br><br>**ஏனையவை**<br><br>மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் | சுகாதாரத்தை மேம்படுத்தும் தேசிய பாடசாலைக் கொள்கைகளுக்கமைய சுகாதாரத்தை மேம்படுத்தும் மாகாண பாடசாலைக் கொள்கைகளை உருவாக்குதல்.<br><br>நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்காக ஆண்டிற்கு இரு முறை மதிப்பீட்டுக் கூட்டங்களை நடத்துதல்.<br><br>பாடசாலை சுகாதார செயற்பாடுகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு அவசியமான பின்னூட்டல்களை வழங்குதல். | மாகாணக் கல்விச் செயலாளர் (தலைவர்) | மாகாணக் கல்விச் செயலாளரினால் வருடத்திற்கு இரு முறை மேற்பார்வை மேற்கொள்ளப்படும். |

6. பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்கான தேசிய ஒருங்கமைப்புச் செயற்குழு (தொழிற்பாட்டுக் குழு)

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| **சுகாதாரத்துறை**<br>சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ( தலைவர்)<br><br>பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொதுச் சுகாதார சேவைகள் 1) | பாடசாலை சுகாதாரம் தொடர்பான விவகாரங்களைக் குறித்து கொள்கை முடிவுகளை எடுத்தல். | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் |

| | | | |
|---|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொதுச் சுகாதார சேவைகள் 11)<br><br>பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு)<br><br>பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)<br><br>பணிப்பாளர் (தாய், சேய் நல சுகாதாரப் பிரிவு)<br><br>பணிப்பாளர் (சுகாதாரக் கல்விப் பணியகம்)<br><br>பணிப்பாளர் (தொற்றாத நோய்த் தடுப்புப் பிரிவு)<br><br>பணிப்பாளர் (போஷாக்குப் பிரிவு)<br><br>பணிப்பாளர் (போஷாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவு)<br><br>பணிப்பாளர் (பெருந்தோட்ட மற்றும் நகர சுகாதாரப் பிரிவு)<br><br>பணிப்பாளர் (தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம் )<br><br>தலைமைத் தொற்றுநோயியலாளர்<br><br>மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் - 02<br><br>சமுதாய மருத்துவ நிபுணர் / பாடசாலை சுகாதாரப் பிரிவு (தேசிய ஒருங்குநிலை உத்தியோகத்தர்)<br><br>சமுதாய மருத்துவ நிபுணர் / பதின்ம வயதினருக்கான சுகாதாரப் பிரிவு சமுதாய பல் வைத்திய நிபுணர் / வாய்ச் சுகாதாரப் பிரிவு<br><br>தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரி - 01<br><br>சுகாதார வைத்திய அதிகாரி - 01 தலைமை சுகாதார வைத்திய அதிகாரி (கொழும்பு மாநகர சபை)<br><br>மாகாண பொதுச் சுகாதாரப் பரிசோதகர்<br><br>கணக்காளர் (சுகாதார அமைச்சு) | நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.<br><br>பாடசாலை சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல்.<br><br>இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக, சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படுவதை சகல உத்தியோகத்தர்களும் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். | | |

| | | | |
|---|---|---|---|
| **கல்வித்துறை**<br>மேலதிக செயலாளர் (கல்வித்தர அபிவிருத்திப் பிரிவு)<br><br>கல்விப் பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் போஷாக்கு)<br><br>கல்விப் பணிப்பாளர் (விளையாட்டுக்கள்)<br><br>கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)<br><br>கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்))<br><br>கல்விப் பணிப்பாளர் (முறைசாரா மற்றும் சிறப்புக் கல்விப் பிரிவு)<br><br>தேசிய நிகழ்ச்சித் திட்ட அலுவலர் (சுகாதாரம்) / தேசிய கல்வி நிறுவனம்<br>**ஏனையவை**<br>ஆயுர்வேதத் திணைக்களத்தின் பிரதிநிதி<br><br>மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதி<br><br>விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிநிதி<br><br>தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் பிரதிநிதி<br><br>சிறுவர் செயலகத்தின் பிரதிநிதி | | | |

7. பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்கான தேசிய மட்ட செயற்குழு

| அமைப்பு | பொறுப்புகள் | ஸ்தாபனத்தின் பொறுப்பு | கண்காணித்தல் |
|---|---|---|---|
| <u>**கல்வித் துறை**</u><br>செயலாளர் / கல்வி அமைச்சு (தலைவர்)<br><br>மேலதிக செயலாளர் (கல்வித்தர அபிவிருத்திப் பிரிவு)<br><br>மேலதிக செயலாளர் (திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வுப் பிரிவு)<br><br>கல்விப் பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் போஷாக்கு) | பாடசாலை சுகாதாரம் தொடர்பான விவகாரங்களைக் குறித்து தேசிய கொள்கை முடிவுகளை எடுத்தல்.<br><br>நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.<br><br>பாடசாலை சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல். | செயலாளர் / கல்வி அமைச்சு | செயலாளர் / கல்வி அமைச்சு (தலைவர்) |

| | | | |
|---|---|---|---|
| கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி )<br><br>கல்விப் பணிப்பாளர் (விளையாட்டுக்கள்)<br><br>கல்விப் பணிப்பாளர் (முறைசாரா மற்றும் சிறப்புக் கல்விப் பிரிவு)<br><br>பிரதான கணக்காய்வாளர் (கல்வி அமைச்சு)<br>**<u>சுகாதாரத்துறை</u>**<br>செயலாளர் / சுகாதார அமைச்சு<br>மேலதிக செயலாளர் (மருத்துவ சேவைகள்)<br>சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( பொதுச் சுகாதார சேவைகள் II)<br>பணிப்பாளர் (தாய், சேய் நல சுகாதார பிரிவு)<br><br>பணிப்பாளர் (சுகாதாரக் கல்விப் பணியகம்)<br><br>சமுதாய மருத்துவ நிபுணர் ( பாடசாலை சுகாதாரத்திற்கான ஒருங்குநிலை உத்தியோகத்தர்)<br>குடும்ப சுகாதாரப் பணியகம்.<br>**ஏனையவை**<br>செயலாளர் / பொருளாதார அபிவிருத்தி அமைச்சு<br><br>செயலாளர் / கால்நடை அபிவிருத்தி அமைச்சு<br><br>செயலாளர் / நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு<br><br>செயலாளர் / கமத்தொழில் அமைச்சு<br><br>செயலாளர் / விளையாட்டுத்துறை அமைச்சு<br><br>தலைவர் / பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை | இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படுவதை சகல உத்தியோகத்தர்களும் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். | | |

செயற்குழுவின் அமைப்பு, கூட்டங்கள், மேற்பார்வை, கண்காணித்தல் ஆகியவை யாவும் செயற்குழுத் தலைவரின் பொறுப்பாகும்.